# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2025

## வளர்தமிழ் 11

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
4 AV DES PRIMEVERES
77290 MITRY MORY
WWW.tamiledc.com

TEDC -FR

TEDC -FR

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |



TEDC -FR

TEDC -FR TEDC -FR

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள்

அ) 100 ☐ ஆ) 216 ☐
இ) 147 ☐ ஈ) 20 ☐

2. மாதவி ஆணாக உருவகித்துப் பாடிய நகர்

அ) புகார் ☐ ஆ) வேலூர் ☐
இ) மதுரை ☐ ஈ) போரூர் ☐

3. தமிழருடைய எண்ணத்தின்படி மிகவும் உயர்ந்த கல்

அ) படிக்கல் ☐ ஆ) சிற்பக்கல் ☐
இ) நடுகல் ☐ ஈ) வைரக்கல் ☐

4. நெசவாளர் ஆடைகளை

அ) எய்தனர் ☐ ஆ) வனைந்தனர் ☐
இ) முடைந்தனர் ☐ ஈ) நெய்தனர் ☐

5. எண்ணெண் கலைகளையும் ஐயந்தீரக் கசடறக் கற்ற மன்னன்

அ) இராவணன் ☐ ஆ) குமணன் ☐
இ) சங்கிலியன் ☐ ஈ) எல்லாளன் ☐

6. சேரசோழபாண்டியர் என்பது

அ) பண்புத்தொகை ☐ ஆ) உவமைத்தொகை ☐
இ) உம்மைத்தொகை ☐ ஈ) வினைத்தொகை ☐



TEDC -FR

TEDC -FR TEDC -FR

7. பாங்கியர் என்பதன் சொற்பொருள்

அ) கூத்தர் ☐ ஆ) தோழியர் ☐
இ) பாணர் ☐ ஈ) விறலியர் ☐

8. யாழ்நூலகம் எரியூட்டப்பட்ட ஆண்டு

அ) 1983 ☐ ஆ) 1956 ☐
இ) 1988 ☐ ஈ) 1981 ☐

9. கட்டுக்கரைக் குளத்தில் இருந்த நீர் தெள்ளத்தெளிந்து காணப்பட்டது. இதில் தெள்ளத்தெளிந்து என்பது

அ) அடுக்குத்தொடர் ☐ ஆ) இணைமொழி ☐
இ) அடுக்கிடுக்குத்தொடர் ☐ ஈ) இரட்டைக்கிளவி ☐

10. செயப்படுபொருள் குன்றிய வினையடி

அ) படி ☐ ஆ) குடி ☐
இ) குளி ☐ ஈ) எடு ☐

11. எருது எக்காளமிடும். அது போல குரங்கு

அ) முரலும் ☐ ஆ) அலப்பும் ☐
இ) கத்தும் ☐ ஈ) சொல்லும் ☐

12. மச்சானே! மாம்பழமே மாமிபெத்த பாலகனே! என்ற பாடல்

அ) தாலாட்டுப்பாடல் ☐ ஆ) காதற்பாடல் ☐
இ) ஒப்பாரிப்பாடல் ☐ ஈ) ஏர்ப்பாடல் ☐


TEDC -FR

13. முழுஇலங்கையையும் சோழர் ஆட்சியின் கீழ் கொண்டுவந்த மன்னன்

அ) பராந்தகசோழன் ☐ ஆ) கரிகாற்சோழன் ☐

இ) இராசராசசோழன் ☐ ஈ) இராசேந்திரசோழன் ☐

14. அத்து என்பது

அ) சாரியை ☐ ஆ) சந்தி ☐

இ) விகுதி ☐ ஈ) பகுதி ☐

15. வெண்டாமரை என்ற சொல்லைப் பிரித்து எழுதினால்

அ) வெண் + டாமரை ☐ ஆ) வெண் + தாமரை ☐

இ) வெண்மை + தாமரை ☐ ஈ) வெண்டா + மரை ☐

16. “வான்கண் விழியா வைகறை யாமத்து” என்ற பாடல்வரி இடம்பெற்ற நூல்

அ) இராவணகாவியம் ☐ ஆ) குடும்பவிளக்கு ☐

இ) புறநானூறு ☐ ஈ) சிலப்பதிகாரம் ☐

17. நண்பகல் என்பதன் எதிர்ச்சொல்

அ) நள்ளிரவு ☐ ஆ) காலை ☐

இ) மாலை ☐ ஈ) இரவு ☐

18. சோழநாட்டின் எல்லையாக அமைந்த ஆறு

அ) பஃறுளி ☐ ஆ) வைகை ☐

இ) குமரி ☐ ஈ) யமுனை ☐

19. “நேற்று என் கனவில் புத்தபெருமான் சுடப்பட்டிறந்தார்…” என்ற பாடலை எழுதியவர்

அ) எம்.ஏ.நுஃமான் ☐ ஆ) அம்பி ☐

இ) பாவேந்தர் ☐ ஈ) சாலை இளந்திரையன் ☐

TEDC -FR TEDC -FR

20. அன்னைதெரேசாவை உலகம் போற்றியது. இது

அ) காலவாகுபெயர் ☐ ஆ) பொருளாகுபெயர் ☐
இ) குணவாகுபெயர் ☐ ஈ) இடவாகுபெயர் ☐

21. நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்ற இடம்

அ) கோலாலம்பூர் ☐ ஆ) பாரிசு ☐
இ) யாழ்ப்பாணம் ☐ ஈ) மலேசியா ☐

22. தேநீர் சாப்பிடுகின்றீர்களா? என்பது

அ) விடைவழு ☐ ஆ) திணைவழு ☐
இ) மரபுவழு ☐ ஈ) வினாவழு ☐

23. விளிப்பொருளை உணர்த்தும் வேற்றுமை

அ) 7 ஆம் வேற்றுமை ☐ ஆ) 6 ஆம் வேற்றுமை ☐
இ) 8 ஆம் வேற்றுமை ☐ ஈ) 4 ஆம் வேற்றுமை ☐

24. "பச்சைக் குழந்தையங்கே பாலுக்கு அழுதிருக்க ..." என்ற கவிதையின் தலைப்பு

அ) ஓடிடும் தமிழா ☐ ஆ) மானிடா சொல் ☐
இ) இனியும் ☐ ஈ) ஓங்குபுகழ் கற்கள் ☐

25. கோட்டையைச் சுற்றி அரணுக்காக அகழப்பட்ட நீர்நிலை

அ) அகழி ☐ ஆ) குளம் ☐
இ) கேணி ☐ ஈ) கிணறு ☐

புள்ளிகள் 25



TEDC -FR

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழகத்திலும் ஈழத்திலும் நடுகல் வழிபாடு இடம்பெற்றுவந்துள்ளது. இந்நடுகல் வழிபாடு பற்றிய செய்திகள் கழக இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. போர்க்களத்தில் போர்வீரர்கள் போர் அறத்திற்கு ஏற்ப போரிட்டனர். அப்போரிலே இறந்த வீரர்களினது உடல்கள் புதைக்கப்பட்டன. புதைக்கும்போது அவர்களது உடல்களுடன் அவர்கள் பயன்படுத்திய போர்க்கருவிகளையும் பொருட்களையும் சேர்த்துப் புதைத்தனர். வீரனது ஆற்றலையும் ஈகத்தையும் போற்றும் வகையில் வீரனது நினைவாக நடுகல் நாட்டப்பட்டது. இறந்த வீரனுடைய உருவம், பெயர் போன்ற செய்திகள் நடுகல்லில் காணப்பட்டன. இவ்வாறு சிறந்த வீரனுக்காக நடுகல் நாட்டி அவன் பெருமைகளைக் கல்லிலே பொறித்து அக்கல்லை வழிபட்டதாகப் பல புறநானூற்றுப் பாடல்கள் கூறுகின்றன. இந்நடுகல் அக்காலத்தில் வீரக்கல் எனவும் அழைக்கப்பட்டது. இவ்வழக்கம் இப்போது அருகிவிட்ட போதிலும் தமிழீழ மண்ணிலே தாய்மண்ணைக் காப்பதற்காகப் போராடித் தம்உயிரை ஈந்த மாபெரும் வீரர்களுக்கு நடுகற்கள் நாட்டப்பட்டன.

1. நடுகல் வழிபாடு பற்றிய செய்திகள் எவற்றில் கூறப்பட்டுள்ளன?

______________________________________________

______________________________________________

2. யாருடைய உருவம், பெயர் போன்ற செய்திகள் நடுகல்லில் காணப்பட்டன?

______________________________________________

______________________________________________

TEDC -FR

TEDC -FR

3. வீரச்சாவடைந்த வீரர்களைப் புதைக்கும்போது அவர்களது உடல்களுடன் எவற்றைச் சேர்த்துப் புதைத்தனர்?

___

___

4. தமிழீழத்தில் யாருக்கு நடுகற்கள் நாட்டப்பட்டன?

___

___

5. தமிழகத்திலும் ஈழத்திலும் எவ்வழிபாடு இடம்பெற்று வந்துள்ளது?

___

___

புள்ளிகள் 10



TEDC -FR

TEDC -FR
TEDC -FR

## 3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. இலங்கையில் சிற்றரசுகள் இருந்த இடங்களில் இரண்டைத் தருக.

___

2. இலங்கையில் கண்ணகிக்குக் கோவில் எடுத்த மன்னன் யார்?

___

3. யாழ் நூலகம் எரியூட்டப்பட்ட செய்தியைக் கேட்டு அதிர்ச்சியினால் உயிர்நீத்தவர் யார்?

___

4. "ஒட்டேன்! அரசோடு ஒழிப்பேன் மதுரையையும்" என்று வஞ்சினம் உரைத்தவர் யார்?

___

5. ஒருவருடைய இன அடையாளத்தைக் காட்டுவது எது என அம்பி கூறுகின்றார்?

___

6. வடவர் எவ்வழியினூடாக நாவலந்தீவினுள் நுழைந்தனர்?

___

7. யாழ்நகர் எரியூட்டப்பட்டபோது எரிக்கப்பட்ட நாளிதழ் அலுவலகம் எது?

___

புள்ளிகள் 10


TEDC -FR

**4. பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

1.



2. தமிழே உலகின் முதன்மொழி
தமிழனே உலகில் முதல் மாந்தன்

___

___

___

___

___

___

___

___

___

___

___

புள்ளிகள் 10

## 5) அ) பந்தியை வாசித்து, இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

வானம் இருண்டு கன்னங்கரிய முகிற் கூட்டங்கள் வந்து சூழ்கின்றன. காற்றுப் பலமாக வீசுகின்றது. மழை வரப்போகின்றது என நினைத்தேன். திடீரென மின்னல் மின்னி இடிஇடிக்கத் தொடங்கியது. மயில்கள் களிப்பில் ஆலத்தொடங்குகின்றன. மழை பொழியத் தொடங்கியதும் பறவை ஒன்று மரக்கிளையில் வந்து இருக்கின்றது. அவ்வேளை, வேங்கை போன்ற வீரமகன் நனிகுளிரில் நடுநடுங்கிக் கொண்டிருந்தான். ஆனாலும் மழைக்காட்சி உள்ளத்துக்கு மகிழ்வைத் தந்தது. அங்கே பல வண்ணங்களில் மலர்ந்திருந்த மலர்கள் மேல் நீர்த்துளிகள் இருக்கும் காட்சி என்னே! அழகு

1. இங்கு வந்துள்ள உரிச்சொல்லைத் தருக.

_______________________________________________

2. 4 ஆம் வேற்றுமை உருபு ஏற்ற சொல் எது?

_______________________________________________

3. அடுக்கிடுக்குத் தொடருக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

_______________________________________________

4. அகச்சுட்டு ஒன்று தருக.

_______________________________________________

5. உயர்திணை ஒருமை வினைமுற்று ஒன்று தருக.

_______________________________________________

6. காற்று எவ்வகைக் குற்றியலுகரம்?

_______________________________________________

TEDC -FR TEDC -FR

7. வினையெச்சம் ஒன்று தருக.

______________________________________________

8. என்னே! இச்சொல்லில் வந்துள்ள இடைச்சொல்லைத் தருக.

______________________________________________

9. பொதுமொழி ஒன்று தருக.

______________________________________________

10. நிகழ்கால வினைமுற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________________________

புள்ளிகள் 10

ஆ) 1. ஒவ்வொன்றுக்கும் எடுத்துக்காட்டுத் தருக.

தோன்றல் ____________

திரிதல் ____________

கெடுதல் ____________

புள்ளிகள் 03

2. பின்வருவன எவ்வகைக் குற்றியலுகரம் என்பதை இனங்கண்டு எழுதுக.

கொக்கு ________________

பயறு ________________

புள்ளிகள் 02


TEDC -FR

TEDC -FR TEDC -FR

6) **தரப்பட்டுள்ள சொற்குவியலில் இருந்து கருத்துக்குப் பொருத்தமான பழமொழிகளைக் கண்டறிந்து எழுதுக.**

முச்சாணும் ஒருகை இளமையிற்கல்வி தெரியும் ஓசை விளையும் இக்கரை தேர் சிலையில் பயிரை அக்கரைக்கு எழுத்து உண்டாகுமா ஓடாது பச்சை தட்டினால் முளையில் அச்சாணியில்லாத்

1. சிறிதின் பெருமை.

_______________________________________________

2. ஒரு செயலில் இரு கன்னை.

_______________________________________________

3. போலித்தோற்றம்.

_______________________________________________

4. பருவத்திலே பயிர் செய்.

_______________________________________________

5. குழந்தைப் பருவத்திலேயே ஒருவரது எதிர்காலம் தெரியும்.

_______________________________________________

புள்ளிகள் 05



TEDC -FR

TEDC -FR

TEDC -FR

## 7) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

மாரி    அக்கறை    வேலை    மாறி    வேளை    அக்கரை

1. புலம்பெயர்ந்து வாழும் மக்கள் நேரகாலம் பாராமல் ______________ செய்கின்றனர்.
2. பெற்றோர் தமது பிள்ளைகளில் ______________ செலுத்த வேண்டும்.
3. காலை ______________ கதிரவன் காலிக்கும் காட்சி என்னே அழகு!
4. ______________ பொழிந்ததால் பயிர்கள் பச்சைப்பசேல் எனக் காட்சியளித்தன.
5. ஆடுகள் பாலத்தினூடாக ஆற்றைக் கடந்து ______________ சென்றன.

புள்ளிகள் 05

## 8) பொருத்தமான சொல்லை வைத்து, குறளை நிறைவு செய்க.

1. ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை

   நோற்பாரின் நோன்மை ______________

   ( படைத்து,    உடைத்து,    அடைத்து )

2. வையத்துள் வாழ்வாங்கு ______________ வானுறையும்

   தெய்வத்துள் வைக்கப் படும்

   ( தாழ்பவன்,    வாழ்பவன்,    கற்றவன் )

புள்ளிகள் 05



TEDC -FR

TEDC -FR TEDC -FR

**9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- இராவணகாவியம்
- சிலப்பதிகாரம்
- முள்ளிவாய்க்காலும் ஈழப்போரும்
- துரித உணவுகளும் அதனால் ஏற்படும் விளைவுகளும்

புள்ளிகள் 15


TEDC -FR

TEDC -FR
TEDC -FR



TEDC -FR